1992 ஏப்ரல் 2] (திரு. கே. செல்வராஜ்)

2 பகுதிகள் நவீனப்படுத்தாமல், அந்தப் புகை வந்து கொண்டே இருக்கின்றது. எனவே இந்த நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு உடனடியாக அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி புகை வராமல் தடுக்கவும், இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் ஆவன செய்ய இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேதிக்கு முன்னாலே பதில் சட்ட மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே இதே நிலை நீடிக்குமானால் மாசுக் கட்டுப்பாட்டுவாரியம் அந்த ஆலை மீது உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130—விசைத்தறித் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130 விசைத்தறித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காதது, "குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை

திருநெல்வேலி சரகத்திலுள்ள டி.என்.எச். 130 வீரவநல்லூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு திங்கள் தோறும் 7-ம் தேதி சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இத்திங்களிலும் பிப்ரவரி 1992 திங்களுக்கான ஊதியம் மார்ச்

7 ஆம் தேதி வழங்கப்படவேண்டும். ஆனால் சங்கத்தின் நிதி நெருக்கடி காரணமாக வழங்க இயலவில்லை. 1992 ஆம் ஆண்டிற்கான காசுக்கடன் மத்திய வங்கியிலிருந்து பெறுவதில் ஏற்பட்ட காலதாமதமே இந்நிலைக்கு காரணம். இருப்பினும் தற்போது 26–3–1992 ஆம் தேதி அன்று அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியம் வழங்கப்பட்டு உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித இடையூறுமின்றி பணிக்கு வருகின்றனர்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவநல்லூர் டி. என். எச். 130 விசைத்தறித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் விசைத்தறி தொழிற்கூடம் ஒன்று அங்கே இயங்கி வருகின்றது. ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழும் தாட்கோ நிறுவனத்தின் மூலமும் சுமார் ரூ. 27இலட்சம் மூலதனத்தில் இந்தத் தொழிற்கூடம் அமைக்கப்பட்டது. 1989 பிப்ரவரியில் அந்தத் தொழிற்கூடம் இயங்கத் துவங்கியது. 50 விசைத்தறி மெஷின்களும் 3 ஒய்ண்டிங் மெஷின்களும் பொறுத்தப்பட்டு, 3 ஷிப்டுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இத்தொழிற்சாலையில் 51 சதவிகிதம் ஆதி திராவிடர்களும், 40 சதவிகிதம் வறுமை கோட்டிக்குக் கீழே வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பணியாளர்களாக நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். தற்போது தனி அதிகாரி ஒருவர் பொறுப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தொழிற்சாலையிலே நெசவு உற்பத்தி குறைந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் முழுமையாக உற்பத்தி நின்றுவிடும் நிலை உள்ளது. இது சம்பந்தமாக தனி அதிகாரி எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் மாதந்தோறும் முறையாக வழங்கப்படவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், உங்களைக் கேள்வி கேட்பதற்காகத்தான் அழைத்தேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு சரியான முறையில் மாதாமாதம் சம்பளம் வழங்கப்படாததால், மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் நேரில் போய் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் அதை கைவிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதாமாதம் சரியான நேரத்தில் சம்பளம் வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் 7 ஆம் தேதி சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. பிப்ரவரி மாதத்தின் சம்பளம் மட்டுந்தான் 26–3–1992 அன்று தரப்பட்டது.

1992 ஏல்ரல் 2]. [மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்]

முற்பகல் 10–50

பிப்ரவரி மாதத்திற்குரிய சம்பளம் மார்ச் மாதம் 7 ஆம் தேதி தரப்பட வேண்டும். அதுதான் 26-3-1992 அன்று தரப் பட்டது. அதற்குக் காரணம் காசுக்கடன், மத்திய வங்கியிலிருந்து பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம்தான் என்பதைக் கோடிட்டுக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அது குறித்த குறிப்புகளைத் தருவார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக் கின்றேன் :

(1) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை பற்றிய பரிந்துறைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தெட்டாவது அறிக்கை.

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983–84–ம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த ஐம்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் இருபத்தேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவையில் மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய முப்பத்தொன்பதாவது அறிக்கை.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள்; வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1992.